# எதிர்காலத்தை குறித்த பயத்தோடு மன அழுத்தத்தில் சோர்வோடு இருக்கும் போது தேவன் அளிக்கும் ஆறுதல் - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:..**இன்றைக்கு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியில், பதினேழு வயது நிரம்பிய சுறுசுறுப்பான வாலிப பெண் குதிரை சவாரியை விரும்புபவள், ஹாக்கி நீச்சலும் பிடிக்கும், ஒருமுறை ஆற்றில் குதிக்கும்போது தனது தண்டுவடத்தை உடைத்துகொண்டாள். பலவித அறுவை சிகிச்சைகளுக்கு பிறகு தன்னால் நடக்கவும் தனது கரங்களை பயன்படுத்தவும் முடியாது என்பதை அறிந்தால், அவர் இனி தனது வாழ்நாள் முழுவதும் சக்கர நாற்காலியில் தான் இருக்கவேண்டும். கடந்த நாற்பத்தி ஐந்து ஆண்டுகளாக ஏமாற்றங்கள் மனஅழுத்தம் எதிர்காலத்தை பற்றிய பயத்திலிருந்து மீண்டு ஜெயமெடுக்க தேவன் ஜோனி எரிக்சன் டாடாவிற்கு எப்படி உதவினார்?

நாற்பது வயது நிரம்பிய மனிதர், கத்துக்கோப்பான உடல் நிலை, வாரத்தில் 3 முறை ராகெட் பந்து விளையாடுபவர், தனகென்று உடலிடை பயிற்சியாளரை உடையவர். எதிர்பாராதவிதமாக தனது பின் பகுதியில் வலியையும் வேதனையையும் உணர்ந்தார், அது அவரை வேதனைமிகுந்த அறுவை சிகிச்சைகளை எதிர்கொள்ள செய்தது

அவருடைய ஜீவனை காக்க மருத்துவர்கள் சில தண்டு வட அடுக்குகளை அகற்றி எழும்புகளை இணைத்தனர்.

இன்றைக்கு Dr. மைகேல் எஸ்லே, வேதாகம கழகத்தின் நிறுவனர் தலைவராக இருக்கிறார், மேலும் ஜோனி எரிக்சன் டாடா இருவரும் தங்களுடைய ஏமாற்றமான மன அழுத்தம் பயம் நிறைந்த சூழ்நிலையில் தேவன் எப்படி அவர்களுக்கு ஆறுதல் அளித்தார் என்பதை நம்மோடு பகிர்ந்துகொள்ள இருக்கிறார்கள். இந்த விசேஷித்த ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இங்கு என்னோடு Dr. மைகேல் எஸ்லே மற்றும் ஜோனி எரிக்சன் டாடா இருக்கிறார்கள். ஒரு சிறந்த தலைப்பில் செய்தி தொடரை பார்த்து வருகிறோம் உபத்திரவம், இயலாமையில் இருப்பவர்களுக்கும் வியாதியில் இருப்பவர்களுக்கும் தேவன் எப்படி உதவுகிறார் தேற்றி வருகிறார் என்பதை பற்றி பார்த்துகொண்டிருக்கிறோம். இப்போதும் உங்கள் அநேகருக்குள் இருக்கும் கேள்வியை பற்றி பார்க்க இருக்கிறோம், அதற்காகத்தான் இந்த இடம். அந்த கேள்வியை உங்கள் முன் வைக்கிறேன். தேவனிடத்தில் விசுவாசத்தோடு உண்மையாய் தங்களுக்கு சுகம் வேண்டும் என்று கேட்கிறவர்களுக்கு அவர் சுகம் தருகிறார் என்று

வேதம் போதிக்கிறதா? சுகத்திற்கான நம்முடைய வேண்டுதல்களுக்கு தேவன் எப்போதும் சரி என்று சொல்வார் என்று சொல்லப்பட்டிருக்கிறதா? இப்ப நா ஜோனிகிட்ட பேச நினைக்கிறேன், சரியா. ஒரு கிறிஸ்தவராக, சுமார் நாற்பத்தி ஐந்து வருடமா இந்த சக்கர நாற்காலியில் தான் இருக்கீங்க. உங்களுடைய கழுத்து பகுதி முறிந்துவிட்டது. இரண்டு வருடங்களுக்கு முன்பு, உங்களுக்கு மார்பக புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது. இது எல்லாத்துக்கும் மேல, நீங்க உட்காருகிற பகுதியில் உங்க எலும்புகள் விரிவடைந்து இருப்பதனால தாங்க முடியாத வேதனையோடு இருக்கிறீர்கள். தேவனிடத்தில் உங்களை சுகப்படுத்தும்படி எப்போதாவது ஊக்கமா ஜெபித்தது உண்டா?

ஜோனி எரிக்சன் டாடா:...ஓ, ஆமா! சுகத்திற்காக ஜெபிப்பதை நா ஒருபோதும் தடுத்து கிடையாது. யாராவது என்னுடைய சுகத்திற்காக ஜெபிக்க விரும்பினா, அவங்க அப்படி செய்வதில் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும். வேதத்தில் யாக்கோபு 5 ல் சொல்லப்பட்டிருக்கிறது, “உங்களில் ஒருவன் வியாதியாயிருந்தால், சபையின் மூப்பர்களிடத்தில் போக வேண்டும்,” வேதம் சொல்லுகிற எல்லாவற்றையும் செய்திருக்கிறேன், எண்ணெய் பூசி, பாவங்களை அறிக்கை செய்திருக்கிறேன்.

ஆனா ஒரு கட்டம் வந்தது அப்ப, இதை எல்லாவற்றையும் செய்து பார்த்த பிறகும், அப்படியே இருக்க வேண்டியிருந்தது. நீங்க காலையில எழுந்திருப்பீங்க உங்க வாழ்க்கை அப்படியேதா இருக்கும். சங்கீதம் 103 ஒரு உத்திரவாதத்தை தருகிறது, நம்மில் யாராவது சுகம் அடைகிறோம் என்றால், அது ஒருவேளை காய்ச்சலாக இருந்தாலும், உடைந்த கால் சுகமைவடதாக இருந்தாலும், இடுப்பு எலும்பு சுகமைந்தாலும், தேவன் தான் அதை செய்கிறார். அது டாக்டர்கள் மூலம் தேவன் செய்கிற கிரியையாக இருக்கிறது. தேவன் தான் அறுவை சிகிச்சைகள் மூலம் சுகமாக்குகிறார், மருந்துகளை தருகிறார். எல்லா விதங்களிலும் எல்லாவிதமான வியாதிகளையும் அவர் குணமாக்குகிறார். ஆனா அவர் யாரை குணப்படுத்தனும் எப்படி குணப்படுத்தணும் என்று நினைக்கிறாரோ அப்படி அற்புதமாக குணப்படுத்துவது அவருடைய இஷ்டம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் உடல் சுகத்திற்கான காசோலையில் தேவன் எப்போதும் கையெழுத்து போடுவார் என்று எதிர்பார்ப்பது சரியல்ல என்று நான் நினைக்கிறேன். அதாவது, ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும், மைகேல் முதல் நிகழ்ச்சியில் சொன்னது போல, எல்லா வியாதிகளும் நோய்களும் விழுந்து போன உலகத்தில் வாழ்வதின் விளைவாக இருக்கிறது. மேலும் இயேசு வந்தப்போது, பாவத்தின் தாக்கத்தை தலைகீலாக்கினார், ஆனா முழுமையாக செய்யவில்லை. ஆமா, அவர் காற்றை அதட்டினார், ஆனா

இன்னைக்கும் சூறாவளிகள் இருக்கிறதே. சரி, மரித்தோரை எழுப்பினார், அப்படிப்பட்ட லாசரு கூட, அவர் உயிரோடு எழுப்பினவன், திரும்பவும் மாறித்தானே. அப்பறம், நம்முடைய விசுவாசத்தினால் நம்முடைய வாழ்வில் இருந்த பாவத்தின் வல்லமையை அவர் விளக்கி விட்டார், ஆனா பாவத்தின் பிரசன்னத்தை இன்னும் விளக்க வில்லை. இன்னும் பாவத்தோடு போராடிக்கொண்டு இருக்கிறோம். அப்படியிருக்கும் போது கிறிஸ்தவர்களாகிய நாம் ஏன் வியாதியும் வேதனையும் நோயும் கிறிஸ்தவர்களாகிய நமக்கு இருக்க கூடாது என்கிற கண்ணோட்டத்தில் இருக்கிறோம்? சரி, இருக்கட்டும், மத்த எல்லாத்தையும் ஏத்துக்குவோம், சூறாவளிகள், காய்ச்சல், இயற்கையின் சீற்றங்கள், மரணம், வியாதி.

**ஆன்கர்பெர்க்:** இதை உங்க புத்தகத்தில் ரொம்ப அழகா சொல்லியிருக்கீங்க. மையமான கேள்வி இது கிடையாதுன்னு சொல்லியிருக்கீங்க, “தேவனால சுகப்படுத்த முடியுமா.” ஏன்?

டாடா:...நிச்சயமா தேவனால சுகப்படுத்த முடியும். ஒவ்வொருநாளும் தேவன் சுகம் தருகிறார். இப்போதும் உலகமுழுவதும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது அதிசயமான அற்புதங்கள் நடந்துகொண்டே தான் இருக்கிறது அது இருளையும் பிள்ளிசூனியங்களையும் குரிசொல்லுதலையும் எதிர்த்து நிற்பதாக இருக்கிறது, தேவன் இன்னும் அற்புதங்களை செய்துகொண்டு தான் இருக்கிறார். அவருடைய கரம்

குறுகிபோகவில்லை. அவருடைய செவிகள் மந்தமாகவுமில்லை. ஆனா யாரை எப்படி சுகப்படுத்தனும் எப்போதும் என்கிற வரைமுறைகளை அவர்தான் தீர்மானிக்கிறவராக இருக்கிறார் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். நித்தியத்திற்கு இந்த பகுதியில் நாம் அவருடைய நோக்கம் திட்டங்களை முழுமையாக புரிந்துகொள்ள முடியாது, ஆனா அவருடைய காரணங்கள் முற்றிலும் மாறுபட்டிருப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் அவை, நல்லது, குறிப்பாக, இருக்கும் ஆனால் அவை கல்லறைக்கு இந்த பக்கத்தில் மறைவானதாக தான் இருக்கிறது. அந்த பக்கம் போகிற வரைக்கும் ஏன் அவர் சுகப்படுத்தவில்லை என்பதை புரிந்துகொள்ள முடியாது.

**ஆன்கர்பெர்க்:** சரி. அடுத்து இன்னொரு கேள்வி இருக்குது, உண்மையாய் விசுவாசத்தோடு தம்மிடத்தில் வந்து சுகத்திற்காக ஜெபிக்கிறவர்களுக்கு சுகத்தை அளிக்க வேண்டும் என்பது தேவ சித்தமா?

டாடா:...சரி, மாற்கு 9 தை யோசித்து பார்க்கிறேன், இதே இயேசுதான் உன் கரங்களை தரித்து போடு என்கிறார் உன் கரம் உன்னை பாவம் செய்ய வைத்தால், அதை தரித்துபோடு. இதே இயேசுதான் குருடர்களின் கண்களை திறந்தவர், இவரை, இச்சையான கண்களை பிடுங்கிபோடு என்கிறார். நித்தியா அக்கினியில் முழுமையாய் போவதற்கு பதில் ஊனனாய் பரலோகம் செல்வது மேல். சரி, இங்க

உண்மையா இயேசு என்ன சொல்ல வருகிறார் என்றால் முன்னுரிமைகள் இருக்கணும், அவருடைய முன்னுரிமைகளுக்குள் நாம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்; அவ்வளவு தான்., அதனால நம்மில் சிலர் முடமாக இருப்பதே மேலாக இருக்கும் ஏன்னா அப்ப செய்யகூடாத காரியங்களை நம்ம கைகள் செய்யாது போககூடாத இடங்களுக்கு நம்ம கால்களும் போக முடியாது. இந்த வேதபகுதி எதை குறிக்கிறது என்று சொன்னால் இயேசு ஆவிக்குரிய குணமடைதலை பற்றி சொல்லுகிறார், நீதியானவைகள், சந்தோஷம் சமாதானம் என்ற முக்கியமான காரியங்களை கூறுகிறார்.

இதெல்லாம் நல்லா வேலை செய்கிற கைகள் கால்கள் இருப்பதற்கு மேலான காரியங்களாக இருக்கிறது. நடப்பதற்கு நமது கரங்களை பயன்படுத்துவதற்கு மேலான பல விஷயங்கள் இருக்கிறது, நித்திய வீட்டை அடையவேண்டும், ஜீவியத்தின் நோக்கம் அதுதான், இப்போது உங்கள் வாழ்வில் நீங்க சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அனுபவிக்கிறவர்களாக இருக்க வேண்டும். அதுதான் ஆவிக்குரிய குணம் அதைதான் நாட வேண்டும், அது ஆழமானது. ஓ. மை குட்னஸ், இந்த சக்கர நாற்காலியில் உட்கார்ந்து சிரித்த முகத்தோடு இருப்பதற்கும் மேலான ஒன்று, எல்லா பிரச்சனைகள் இருந்தாலும், இந்த சந்தோசம் இருக்கிறது. அதுதான் அற்புதம்!

**ஆன்கர்பெர்க்:** சிலருடைய கருத்துபடி, அதாவது, நீங்க சுகத்தை உணராததற்கு காரணம் என்னவென்றால் ஒன்று உங்களுடைய விசுவாசம் குறைவாக இருக்கும், இல்லைன்னா உங்க வாழ்க்கையில் மறைமுகமான பாவம் இருக்கும் என்கின்றனர். அந்த காரியங்களை விட்டுவிட்டால், உண்மையில், உங்களுக்கு நிலையான விசுவாசம் இருந்தால், தேவன் உங்களை சுகப்படுத்துவார், ஏன்னா எல்லாரும் சுகம் பெறவேண்டும் என்று விரும்புகிறார். நீங்க என்ன சொல்றீங்க?

டாடா:...சரி, அவங்களுக்கு நான் மாற்கு சுவிசேஷம் முதல் அதிகாரத்தை முன்வைக்கிறேன். கப்பர்நகூமில் எல்லாரும் இயேசுவிடம் வருகிறார்கள், வலது இடது புறமாக சுகமடைந்தார்கள். அதை அவர் அந்த நாள் முழுதும் செய்துகொண்டிருந்தார். சூரியன் மறைந்தது, அவரும் வந்துவிட்டார், ஜனங்களும் போய்விட்டார்கள். அடுத்த நாள் காலையில் நேரத்தோடு எழும்பினார். மலையின் அப்புறத்தில் அவர் ஜெபிக்கும்படியாக கடந்து சென்றார். சூரியன் உதித்தது, மறுபடியும் ஜனங்கள் புறப்பட்டு வந்தார்கள், அதிகமான சுகம், அதிகமான எதிர்பார்ப்புகள். சீஷர்கள் இப்ப தடுமாறுகிறார்கள், இயேசு எங்க போனார்? அவர் எங்கே இருக்கிறார்? அவரை தேடி மலையில் ஏறி போனார்கள் அவரை தேடிட்டு போனாங்க, அவர் அங்க ஜெபித்து கொண்டிருந்தார். “போதகரே” என்றார்கள், “இவர்கள் எல்லாரும் உம்மை பார்க்குபடி வந்திருக்கிறார்கள் என்றனர். இயேசு

அவர்களிடம் வித்தியாசமான ஒரு காரியத்தை சொல்லுகிறார். ஆர் அவர்களிடம், “வேறு எங்காவது போவோம் வாருங்கள் என்றார். நான் பிரசங்கிக்கும்படி மற்ற கிராமங்களுக்கு போவாம் வாருங்கள் என்றார். இப்ப. இதை கவனிங்க, இதற்காகவே நான் வந்தேன் என்றார்.”

அதாவது, இயேசுவுக்கு புற்றுநோயாளிகள் மீதும் முடமானவர்கள் குருடர்கள் சப்பாணிகள் என்று மலையின் அடிவாரத்தில் இருக்கிற ஜனங்களை குறித்து அக்கறையும் கவலையும் இல்லை என்று சொல்ல முடியாது. ஆனா அவர்களுடைய எதிர்ப்பார்ப்பு அவருடைய முன்னுரிமை இல்லை. அவருடைய முன்னுரிமை பரலோக ராஜ்யத்தின் நற்செய்தியை பிரசங்கிப்பதாகும், சாத்தானின் பிடியில் இருக்கும் ஜனங்களை விடுவிப்பதாகும், பிதாவின் ராஜ்யத்தை பிரஸ்தாபிப்பதாகும், பிசாசு தன்னுடையதாக எண்ணிக்கொண்டிருக்கும் எல்லையில் தந்து குடும்ப கொடியை நாட்டவேண்டும் என்பதாகும். அதுதான் கிறிஸ்துவின் திட்டத்தின் மையப்பகுதி. நம்முடைய பாவங்களில் இருந்து நம்மை மீட்டு அவர் எந்த அளவிற்கு அக்கிரமத்தை வெறுக்கிறாரோ அந்த அளவிற்கு நானும் வெறுக்கும் படி இருக்கவேண்டும். அப்படி சொல்லும்போது, என்ன சொல்கிறேன் என்றால் பயம், கவலை, சந்தேகம், வியாகுலம், நம்பிக்கையற்ற நிலை, முரட்டாட்டம், சுயானால், பெருமை, இந்த காரியங்களில் நமக்கு நிச்சயம் சுகம் அவசியமாக இருக்கிறது, இவை வேலை செய்ய

உதவிடும் விரல்கள் பிரயாணிக்க நடக்க உதவிடும் கால்களை விட மேலானாவைகள் தானே.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, ஜனங்க சொல்வாங்க, “ஜோனி, சொல்றது உங்களுக்கு புரியுதான்னு தெரியல, ஏன்னா, பொதுவா, நீங்க சுகமளிக்கும் கூட்டங்களுக்கு போய் அங்க விசுவாசத்தோட ஜெபித்திருந்தா, நல்ல சுகம் கிடைத்திருக்கலாம்.” நீங்க அதையும் செய்தீங்க. நீங்க மிகவும் பிரசித்திபெற்ற விசுவாச வீராங்கனையான கேத்தரின் குல்மனுடைய கூட்டத்துக்கு போயிருக்கீங்க. சிலருக்கு அவங்கள பத்தி தெரியாது, ஆனா எனக்கு நியாபகமிருக்குது. உண்மையாக நீங்க, அங்க போனீங்க, அப்பறம் என்ன நடந்தது?

டாடா:...நிச்சயமா. என்னுடைய சகோதரி என்னை அழைத்து சென்றால், அது எழுபதுகளில் நடந்தவைகள். அங்க கேதரின் குல்மன் அவர்கள் ஹில்டன் பால்ரூம் ஹோட்டலுக்கு வந்தாங்க, தரையை உரசும் நீண்ட கவுன் விளக்குகளின் ஒளியில் பலவிதமான காரியங்கள் வசனங்கள் வாசிக்கப்பட்டது பலவிதமான சாட்சிகளையும் பகிர்ந்துகொண்டார்கள். சக்கர நாற்காலியில் இருந்த நாங்கள் அனைவரும் அந்த ஸ்பாட் லைட்டின் வெளிச்சத்தில் நடப்பதை பார்த்துகொண்டிருந்தோம், அங்கிருந்த எல்லாரும் சுகமடைந்து போலதான் தெரிந்தது. கடுமையான பிரச்சனைகளில் இருப்பவர்கள் இங்க வாங்கன்னு சொன்னாங்க. அந்த நேரத்தில், சக்கர நாற்காலில்

உட்கார்ந்திருந்த எங்கள்ள ஒருத்தர்கூட சுகமடையவில்லை. அவங்க எங்கள தான் முதல்ல வெளியில கொண்டுவர முயற்சி செய்தாங்க ஏன்னா லிப்ட்ல கூட நெரிசல் அதிகரிக்ககூடாதுன்னு நினைச்சிருக்கலாம். அங்க நா உட்கார்ந்திருந்தேன், அந்த எளிவட்டர்ல 35 பேரில் 15 வது ஆளாக உட்கார்ந்திருந்தேன், நா அங்கிருந்த லைன பார்த்தேன். யோசிக்க ஆரம்வித்தேன், இதுல ஏதோவொரு தவறு இருக்கிறது. நானும் பால்ரூமல் சுகமடைந்து இருக்கனுன்னு நிச்சயமாக நம்பியிருந்தா நா வேதத்தை சரியாக வாசிக்கவில்லை என்று தான் அர்த்தம். ஆனா அந்த அனுபவம் என்னை இன்னும் தேவ வார்த்தைக்குள் திடப்படுத்தினது, அவருடைய முன்னுரிமைகளையும் உண்மையான சுகம் என்ன என்பதை எனக்கு புரிய வைத்தது.

**ஆன்கர்பெர்க்:** இப்போதும் ஒரு இடைவெளி எடுத்துக்க போகிறோம். திரும்ப வந்ததும், உங்களிடம் ஒரு கேள்வியை கேட்க்க விரும்புகிறேன், நாற்பத்தி ஐந்து வருடமா இந்த சர்கர நாற்காலியில் மூட்டு முடக்குவாதத்தொடும் புற்றுநோயோடும் இப்போதுவரை சொல்லொண்ணா வேதனையோடு உட்கார்ந்துகொண்டு இருக்கிறீர்கள், தேவன் எல்லாரையும் சுகப்படுத்துவதில்லை என்பதை பற்றிய உங்களுடைய தீர்வு என்ன? ஏன் தேவன் உங்களை குணமாக்கவில்லை? தேவன் உங்களிடம் என்ன சொன்னார்? நேயர்களே தொடர்ந்து இணைந்திருங்கள். மீண்டும் உங்களை சந்திக்கிறோம்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. இப்போது நாம் ஜோனி எரிக்சன் டாடாவிடம் பேசிக்கொண்டிருக்கிறோம். மேலும் Dr. மைகேல் எஸ்லேவும் நம்முடன் இருக்கிறார். மிகவும் முக்கியமான ஒரு கேள்வியை குறித்து பேசிகொண்டிருக்கிறோம்: நீங்க வியாதிபட்டிருந்தா, உங்களுக்கு புற்றுநோய் இருந்தால், அல்லது அல்ஹீமர் இருந்தால், அல்லது மூளை கட்டி, அல்லது வேறு ஏதாவது வியாதிகள் இருந்தா, ஆர்த்ரிடிஸ், போன்றவற்றோடு நீங்கள் தேவனுக்கு முன்பாக நின்று, "தேவனே, எனக்கு இந்த பிரச்சனை இருக்கிறது. உம்மால் சுகப்படுத்த முடியும் என்று விசுவாசிக்கிறேன், அதை இப்போதே நீர் செய்யவேண்டும் என்று கேட்கிறேன் என்று சொல்கிறீர்கள்." ஆனா அவர் அதை செய்வதில்லை. ஏன் அப்படி உங்களுடைய விசுவாசம் குறைவாக இருக்கிறது என்பதாலா? உங்களுக்குள் இரகசியமான பாவங்கள் இருக்கிறது என்பதாலா? அல்லது அதற்கு வேறு ஏதாவது காரணங்கள் இருக்கிறதா? வேதாக ரீதியாக பார்க்கனுன்னு நினைக்கிறேன்... மைக்கேல், இங்க ஜோனியின் முடிவை நான் கேட்க விரும்புகிறேன், நாற்பத்தி ஐந்து வருடங்களாக அவர் சர்கர நாற்காலியில் இருக்காங்க, இந்த கேள்விக்கு அவங்க என்ன பதில் சொல்வாங்க; வேதாக ரீதியில், ஒரு நிமிடம் இருக்க, இப்ப விசுவாசம் இருந்தும் தங்களுக்குள் பிரச்சனை இருந்தும் அதை

தேவனுக்கு தெரியப்படுத்தியும் பதில் கிடைக்காமல் இருப்பவர்களை பற்றி பார்க்கலாம். அந்த பட்டியலை பார்க்கலாமா.

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:...**ஆமா, முதலாவதாக, கிறிஸ்து நாம எதிர்பார்க்கிற மாதிரி எல்லாரையும் சுகபடுத்திட மாட்டார், ஜோனி சொன்னது போலதான். என்னை பொறுத்தவரை பாவத்தை கவனிக்கணும் பாவத்தின் நிலை எப்படி இருக்கு அதோடு கிறிஸ்துவின் அற்புதங்களையும் கவனிக்கணும். சரி, இதை மேம்படுத்தி பார்த்தால், நாம எல்லாருமே பாவிகள் தான், எல்லாருமே அழுகிக்கொண்டு இருக்கிறோம். இந்த ஒவ்வொரு அற்புதங்களும், ஒருவருடைய சுகமளித்தளின் வெளிப்பாடாக இருக்கிறது அல்லது அற்புத அடையாளமாக இருக்கிறது, இயற்கையின் மீது அவருக்கு இருக்கும் வல்லமையை எடுத்து கூறுகிறது, “சூப்பரா நேசுரா” இயற்கையின் மீது. அதனால கிறிஸ்து சுகமாக்குவதற்காக மட்டும் வரவில்லை. அவர் ஒரு மருத்துவமனையை திருந்திடலாமே வியாதியுள்ளவர்கள் எல்லாரும் அங்க வந்தா அவர் அவர்களை தொட்டால் மட்டும் போதும், ஆனா அது அவசியமாக காணப்படவில்லை. இந்த பிரச்சனையே பாவத்தின் நிலைதான். பவுல், உண்மையில், இது எளிதான ஒன்றாக இருக்கிறது. இங்க அவருக்கும் ஒரு பிரட்சனை வருகிறது... அது என்னன்னு நமக்கு முழுசா தெரியாது, அதிலிருந்து தேவன் அவருக்கு விடுதல் கொடுத்தாரா. அவர் சொன்னால் என் கிருபை உனக்கு போதும் பெலவீனத்தில் என் பெலன் பூரணமாக இருக்கும்.” இந்த பிரச்சனையை

குறித்து பவுலின் அணுகுமுறை தான் எனக்கு ரொம்ப பிடிக்கும், வெளிப்புற மனிதன் அழுகிடுவான், ஆனா உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதுப்பிக்க பட்டுக்கொண்டே இருக்கிறான். சரி, தேவன் என்னை குணப்படுத்துவார் என்பதில் என்னுடைய விசுவாசம் இருக்குமானால், அறிக்கை செய்யப்படாத பாவங்கள் அறிக்கை செய்யப்படனும், பிரச்சனைகள் நிறைந்த பல பகுதிகளை வேதாகமத்தில் பார்க்க முடியும், குறிப்பாக அப்போஸ்தலனாகிய பவுலும் அதில் ஒருவராக இருக்கிறார். ஸ்தேவான் உண்மைய சொன்னா, கடுமையா கல்லெறிந்து கொல்லப்பட்டார். அநேக பரிசுத்த வான்களை சொல்லீட்டே போகலாம்.

**ஆன்கர்பெர்க்:** சரி, தீமோத்தேயு அவருக்கு, வயிற்றில் பிரச்சனை இருந்தது.

**எஸ்லே:**…அவருடைய வயிறு. அப்ப சில வியாதிகள் குணப்பட முடியாததாக இருக்கிறது. அப்ப....

**ஆன்கர்பெர்க்:** பவுலோடு இருந்த, துரோப்பீமு, வியாதிபட்டார். அந்த கூட்டத்தில் அவர் இருக்கவேண்டியிருந்தது, பவுல், தனக்கு தேவன் அருளிய சுகமளிக்கும் வல்லமை அனைத்தையும் பயன்படுத்தினாலும், அவரால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

**எஸ்லே:**…அவருக்கு உதவனும். யோவான் 9 ல் சம்பவம் எனக்கு பிடிக்கும், ஏன்னா இங்க ஒரு குருடன் மிக முக்கிய சாட்சியாக நிற்கிறார். அவர் சுகம் வேணுன்னு கேட்கல. அவனுக்குள்ள  எந்த

விசுவாசமும் காணப்படவில்லை. இப்ப சீஷர்களுக்கு எழும்புகிற கேள்வி என்னன்னா, "யாருடைய பாவம், இவனுடையதா இவனது பெற்றோருடையதா, இவன் குருடா பிறந்ததற்கு யார் காரணம்? ஏன்னா ரபி மார்கள் கருவில் கூட பாவம் செய்திருப்பார்கள் என்று சொல்கிறவர்கள். அப்ப. இயேசு சொல்றாரு, எதுவுமில்லை, தேவனுடைய கிரியை இவன் மூலமாக வெளிப்படும்படி இப்படி பிறந்தான் என்றார்." அதனால் அவர் நடந்துபோய், இயேசு உமிழ்ந்து, சேற்றை குலைத்து, அவனுடைய கண்களின் மீது பூசி, சீலோவாம் நதியில் கழுவும்படியாக அனுப்பினார். அது எப்படி நடந்து என்று சொல்லுகிற சம்பவம்தான் இது, ஆனா அப்பறம், இயேசு அவரை பார்க்கும்போது, அவனிடம் கேட்டார், "நீ மனுஷகுமாரனை விசுவாசிக்கிறாயா? அதற்கு அவன், அவர் யார், நான், அவரை விசுவாசிக்கும்படிக்கு அவர் யார் என்றான்." இந்த சம்பவத்தில் அந்த மனுஷனுக்கு கிறிஸ்து யாரென்று தெரியாது. இங்க செயல்படும் விசுவாசம் இல்லை. அவன் செய்த ஒரே வேலை தன் கண்களை கழுவினான். அது விசுவாச செயலா? அவன் தன் முகத்தில் இருந்த சேற்றை கழுவினான். இங்க ஒரு அற்புதம் உருவானது. பிறவியிலிருந்து குருடானவன், புதிய கண்கள் பெற்றான்.

அப்ப கிறிஸ்துவுக்கு உருவாக்கும் சக்தி சுகப்படுத்தும் வல்லமை இருக்கிறது, ஆனா அதற்காகவா அவர் வந்தார்? இப்ப, என்னை பொறுத்தவரை கிறிஸ்து வந்ததின் காரங்களில் ஒன்று

பெருகிகொண்டிருக்கும் பாவத்தை மேற்கொள்ளவும், வியாதிகளின் பிரச்சனைகளை தீர்ப்பதும், இந்த வெளித்தோற்ற முள்ள மனிதன் அழுகிகொண்டே இருக்கிறான், ஆனா உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக வேண்டும் என்பதுதான்  என்று சொல்லுவேன். சரி, சில தேவ பிள்ளைகள் இதை ஏற்றுகொள்வதில்லை என்று தெரியும், ஆனா இது தற்செயலான ஒன்றல்ல, அறிக்கை செய்யப்படாத பாவங்களை சார்ந்திற்கும் காரியமும் அல்ல, ஏன்னா இங்கிருக்கிற இந்த மனிதனுக்கு கிறிஸ்துவை பற்றி எதுவுமே தெரியாது, ஆனாலும் கிறிஸ்து அவனை சுகப்படுத்தினாரே.

**ஆன்கர்பெர்க்:** சரி, அப்போஸ்தலனாகிய பவுல் சிறையில் உட்கார்ந்திருந்தார், சரியா, ஒருமுறை தேவன் தாமே சிறையில் அவருக்கு தரிசனமாகி பவுலை பெலப்படுத்தி ஊக்குவித்தார்,”திடமனதாயிரு. நீ என்னை பற்றி எருசலேமில் சாட்சி கொடுப்பாய், மேலும் நீ ரோமாவிலும் சாட்சி கொடுப்பாய் என்றார்.” சரி, தேவனே அவரை ஊக்குவித்தார். சிறையை விட்டு வந்தாரா. அவர் சிறையில் தான் இருந்தார்.

**எஸ்லே:**…சிறையிலதா இருந்தார்.

**ஆன்கர்பெர்க்:** இன்னும் இருபத்தி நான்கு மாதங்களுக்கு அங்கே உட்கார்ந்திருந்தார்,சரியா, அப்பறம் வெளியில் வந்தார். அந்த இருபத்தி நான்கு மாதங்கள் தேவன் அவரை மறந்துவிட்டாரா? இல்லை, நாம்

விரும்புகிற விதத்தில் அவர் நமக்கு பதில் கொடுப்பது கிடையாது என்று நான் நினைக்கிறேன். அதற்கு மேலான விஷயங்கள் இங்க நடக்கிறதென்று தெரிகிறது.

**எஸ்லே:…**சரி, சரி. எனக்கு, கிறிஸ்துவின் எச்சரிக்கை ரொம்ப பிடிக்கும், ஜனக்கூட்டம் அதிகமதிகமா திரண்டு வந்துகொண்டே இருந்தார்கள், இதை ஏற்க்கனவே கப்பர்நகூம் பற்றி ஜோனி சொல்லீட்டாங்க, ஆனா பரிசேயர்களும் வேதபாரகரும் அவர்தான் மேசியா என்று நிரூபிக்கும்படியான அற்புதத்தை அவர் செய்ய வேண்டும் என்றார்கள். அதற்கு அவர் சொன்னார், “இந்த பொல்லாத விபசார சந்ததியார் அடையாளத்தை தேடுகிறார்கள், யோனாவின் அடையாளத்தை தவிர வேரே அடையாளம் இவர்களுக்கு கொடுக்கபடுவதில்லை, என்று சொன்னார்.” அவர் இங்கு அவருடைய உயர்தெழுதலை கூறுகிறார்: மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலை பற்றி சொல்லுகிறார். ஆனா அற்புதத்தையும் அடையாளத்தையும் பார்க்கும்படி அவரை தேடிட்டு அவர் பின்னால ஓடினா, “நீங்க எனக்கு இதை செய்தா நா உங்களை நம்புவேன், என்று சொல்வது, ஆண்டவரிடம் பூச்சாண்டி காட்ரமாதிரி இருக்கும். அதாவது, என்ன சொல்றேன்னா, நீங்க எனக்கு இப்படி செய்யுங்க, அது வேணும்… சர்வத்துவம் கொண்ட தேவன் நீங்க கேட்கிற மாதிரி செய்யமாட்டார். அதனால, அதை நாம புரிந்துகொள்ள வேண்டும், சில தேவ மக்கள் இதை ஏத்துக்க மாட்டாங்க, ஆனா நா வசனத்தை புரிந்துகொண்ட

வரைக்கும், அவரால சுகமாக்க முடியும். சுகமளிக்கும் வரம் கொண்டவர்கள் இருந்தார்கள், இது என்னுடைய கருத்து, ஆனா இப்ப அதெல்லாம் குறைந்துகொண்டே போகிறது என்பது உண்மை. அவர் சுகப்படுத்துகிறார். எனக்கு அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டபோது, அதில் சுகம் கிடைக்க வில்லை. டாக்டர்கள் உங்கள் சரீரத்தை புண்ணாக்கீட்டாங்க. இதுல இன்னொரு விஷயமும் இருக்குது.... நாம அவருடைய சாயல்ல உண்டாக்கப்பட்டபடியால் நாம சுகமடைய முடியும். ஆனா எப்போதும் நம்முடைய விசுவாச அளவு படிதான் அறிக்கை செய்யப்படாத பாவங்களை கருத்தில் கொண்டு தான் தேவன் சுகப்படுத்துவது சுகப்படுத்தாமல் இருப்பதும் நாடாகும் என்றால் அதை என்னால் ஏற்றுகொள்ள முடியாது.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், ஜோனி, இப்ப உங்க கிட்ட திரும்பி வர்ரேன், சரியா. கேள்வி இதுதான்: நாற்பத்தி ஐந்து வருடங்களுக்கு மேலாக வலியோடும் வேதனைகளோடும் இந்த சர்கர நாற்காலியில் இருக்கிறீர்கள், சரியா, நீங்க ஜெபித்திருக்கீங்க, சுகமளிக்கும் கூட்டங்களுக்கும் போயிருக்கீங்க எல்லா செய்திருக்கீங்க, விசுவாசத்தோடு தேவனிடத்தில் கேட்க்கிரவர்களுக்கு தேவன் சுகமளிப்பாரா என்பதை எப்படி பார்க்கிறீர்கள்?

டாடா:...நா மருத்துவமனையில் இருந்த போது ஜனங்க என்னிடம் கேட்டாங்க, “சரி, வேதத்தில் எந்த பகுதிய உனக்கு வாசிக்கட்டும்? நா

எப்போதுமே யோவான் ஐந்தாம் அதிகாத்தை தான் சொல்லுவேன். “அங்கு ஆடு வாசலுக்கு அருகே இருந்த பெதஸ்தா எண்ணப்பட்ட குளத்தின் அருகில் முடவர்களும் குருடரும் சப்பாணிகளும் இருந்தார்கள்.” அந்த சம்பவத்தில் தொடர்ந்து பார்க்கும்போது இயேசு அங்கு கடந்துவந்து முப்பத்தி எட்டு வருடங்களாக உதவியற்றவனாய் அங்கு படுத்து கிடந்த முடமான மனுஷனிடத்திற்கு கடந்துவந்தார். அவன் இந்த நிலையில் எப்படி இருக்கிறான் என்பதை இயேசு அறிந்துகொண்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது, “நெடுங்காலமாய்” முப்பத்தி எட்டு வருஷம் சக்கர நாற்காலியில் இருப்பது இயேசுவுக்கு நெடுங்காலமாக தெரியும்! ஓ, மை குட்னஸ், அது எனக்கு உதவியாக இருக்கும். ஆனா நா கேட்பதுண்டு, “இயேசுவே, தன் படுக்கையில் கிடந்த இந்த மனுஷனை தேடி போய் சுகப்படுத்தினீர். என்னை தயவுசெய்து சுகப்படுத்தும். அவன் மீது உமக்கு இருந்த அதே இரக்கம் என் மீதும் இருக்கட்டும். தேவனே, என்னை குணமாக்கும்!”

நீங்க சொன்னது சரிதான், ஜான். நா மருத்துவமையில் இருந்து வந்த பிறகு நிறைய சுகமளிக்கும் கூட்டங்களுக்கு போயிருக்கேன், கேதரின் குல்மன் கூட்டமும் அதில் ஒன்று, அதோட சில சபைகளில் செய்வாய் கிழமைகளில் மாலை சுகமளிக்கும் கூட்டங்கள் நடக்கும். அதற்கும் போவேன். எண்ணெய் பூசி ஜெபிப்பாங்க. என் பாவத்தை அறிக்கை செய்வேன். என்னை கொண்டு போய் முன்னால நிறுத்துவாங்க.

எல்லாமே இருக்கும், வசனத்தின்படி எல்லா செய்திருக்கேன், ஆனா தேவன் என்னை குணப்படுத்தவே இல்லை.

சில வருடங்களுக்கு முன்னால ஏ கணவர் என்னை இஸ்ரேலுக்கு கூட்டீட்டு போனாரு. நா, என்னுடைய சக்கர நாற்காலியில், இருந்தபடி பழைய நகரத்தின் வீதிகள் ஒவ்வொருன்றையும் சுற்றி பார்த்தபடியே வந்துகொண்டிருந்தோம், அப்ப நாங்க ஆட்டு வாசலுக்கு வந்தோம், அங்கிருந்து வலது பக்கமா திரும்பினோம், சக்கரங்கள் செய்ன்ட் ஆன்ஸ் சபையை தாண்டினது. அதற்கு பிறகு, திடீரென்று, ஓ. மை குட்னஸ், கென், இங்க பாருங்க. அதுதான் பெ தஸ்தா குளம். ஓ, பென், நா உங்க வந்திருக்கேன். என்னுடைய கற்பனையில் இந்த இடத்திற்கு நா வந்திருக்கேன். நா மருத்துவ மனையில் இருந்த போது பல முறை இந்த இடத்திற்கு வந்து தேவன் என்னை சுகப்படுத்தும்படி வேண்டிகொள்வது போல கற்பனை செய்திருக்கிறேன்.

யாருமே பக்கத்துல இல்ல. நாங்க மட்டும்தான் அந்த இடத்தில் இருந்தோம். டூர் பஸ் எல்லாமே போயிடுச்சு, அது ரொம்ப உலர்ந்த இடமாக காணப்பட்டது காற்று பலமாக அடித்துகொண்டிருந்தது. நா என்னுடைய தோல்பட்டையை அப்படியே அந்த குலத்தின் சுவற்றில் சாய்த்து கொண்டு கதற ஆரம்பித்தேன், “ஓ. இயேசுவே, சரீர சுகத்திற்கான என்னுடைய விண்ணப்பத்திற்கு இதுவரைக்கும் பதில் சொல்லாம ஞானமா நடத்துட்டு இருக்கீங்க; ஏன்னா நீங்க இதுவரைக்கும் செய்ததே பெரிய விஷயம்தான். ஜெபத்திற்கான

விருப்பத்தை எனக்கு கொடுத்திருக்கீங்க. நீங்க எனக்கு சந்தோஷமான மோட்ச வீட்டின் நிச்சயத்தை கொடுத்திருக்கீங்க. என்னுடைய கணவரோடு ஒரு நல்ல ஆழமான ஐக்கியத்தை கொடுத்திருக்கீங்க. காயப்பட்டிருக்கும் மக்களின் தன்மையை நான் புரிந்துகொள்ளுகிற மனதை எனக்கு தந்திருக்கீங்க. என்னுடைய வாழ்வில் நான் பாவத்தை வெறுக்கும் குணத்தை கொடுத்திருக்கீங்க. உம்முடைய வார்த்தையின் ஆழத்தில் என்னை நடத்தி கொண்டு வந்திருக்கிறீர். சாத்தியமானது என்று கனவுகான முடியாத காரியங்களை அதிகமாக செய்திருக்கிறீர். வலி வேதனை இல்லாமல் புற்றுநோய் இல்லாமல் கரங்களை உபயோகிக்க முடியும் என்ற நிலைகளை விட வாழ்வில் பெரிய விஷயங்கள் பல இருக்கின்றன. நீர் எனக்கு அவைகளை வெளிபடுத்தியிருக்கிரீர், ஆண்டவராகிய தேவனே, உண்மையான சுகமடைதல் என்றால் என்ன. அது என்னை இஸ்ரேலில் இருக்கும் பெதஸ்தா குளம் வரைக்கும் கொண்டு வந்திருக்கிறது, ஆனா அவரிடம் ஒரு காரியத்தை சொன்னேன், இயேசுவே உமக்கு நான் நன்றி செலுத்துகிறேன், ஏன்னா சரீர சுகத்திற்கு இல்லை என்று சொல்லுகிற வார்த்தை பல விஷயங்களுக்கு ஆம் என்ற பதில் தந்து, மேலான காரியங்களை காட்டுவதாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** நீங்க செய்த இந்த காரியங்கள் எல்லாவற்றையும் என்னால் நம்ப முடியவில்லை, ஐக்கிய அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி குழுவினர் துவங்கி, பன்னிரண்டு வெவ்வேறு ஊழியங்களை நீங்கள்

நடத்தி கொண்டு வருகிறீர்கள். நா என்ன சொல்றேன்னா, இந்த நாற்காலியில் உட்கார்ந்து ஒன்றை செய்துமுடிக்க முடிவதில்லை ஆனா இந்த சர்கர நாற்காலியில் இருந்து பல ஊழியங்களை இவர்கள் செய்து வருகிறார்கள். நீங்க சுமார் நாற்பத்தி எட்டு தேசங்களுக்கு போயிருக்கீங்க.

டாடா:...ஊனமுற்றோருக்கான செயல்பாட்டை முதன்முறையாக அமெரிக்காவில் வெளியிட்ட போது நா ஜனாதிபதி குழுவில் இடம்பெற்றதை நினைத்து பெருமை படுகிறேன். அதில் நிறைய விஷயங்களை சுட்டி காட்டினேன். ஆனா அது எதுவுமே என்னை போல படுக்கையே கதியாக இருப்பவர்களின் அருகில் போய் அவர்களுக்கு ஆறுதலாக பேசுவதுதான் மேலான காரியம், அவங்ககிட்ட, நம்பிக்கை நல்ல விஷயம், அதுதான் சிறந்த காரியமும் கூட, எந்த நல்ல விஷயத்திற்கு மரணம் இல்லை. அதனால வாழும்போதும் நீங்க அலுவல் நிறைந்தவர்களாக இருக்கணும் மரணம் வந்தாலும் தளர கூடாது என்பேன். என்னோடு சேர்ந்திடுங்கள், என்னோடு சேர்ந்திடுங்கள், செய்வீர்களா? இன்றைய ஜீவியத்தை பயன்படுத்திடுவோம் கிறிஸ்துவுக்காகவும் நம்மை சுற்றியுள்ளவர்களின் நலனுக்காக இதை செய்திடலாமே. ஜீவியத்திற்கு இதைவிட சிறந்த காரணத்தை என்னால் யோசிக்க முடியாது."

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், நேயர்களே, அடுத்த வாரம் இந்த இரண்டு பேரிடமும் கேட்க்க வேண்டும், எப்படி மன அழுத்தத்திற்கு உங்களை விலக்கி பார்த்துகொல்கிரீர்கள்; உங்களுக்கு வலி அதிகமாக இருக்கும்போது எப்படி சோர்வடையாமல் இருக்கிறீர்கள், எப்படி இது உங்களை தடுப்பதில்லை,எப்போது உங்களை எழும்ப முடியாமல் செய்கிறது, எப்போது உங்கள் சரீரம் உங்களுக்கு ஒத்துழைப்பு இல்லை? தேவன் உங்களுக்காக என்ன செய்கிறார்? ஒவ்வொரு நாளையும் நீங்கள் எப்படி கடத்துகிறீர்கள்? இதை கேட்டுகொண்டிருக்கிறவர்களில் அநேகர் எனக்கு தெரிந்து, இந்த கேள்விகளுக்கான விடையை அறிந்திட விரும்புகிறீர்கள். அடுத்த வாரம் தவறாமல் நிகழ்ச்சியை பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2013 A.T.R.I.